REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

வானவெளியில் 1,05,000 அடி உயரத்தில் ஆராய்ச்சி செய்வதற்குத் துணிவு!

வானவெளிப் பிரயாணம் மனிதனை எவ்வாறு பாதிக்கும் என்பதை ஆராய்வதற்கு அமெரிக்க விமானப் படை வகுத்துள்ள திட்டத்தின்கீழ், இந்தக் கோடை காலத்தில் டாக்டர் ஒருவர் வான வெளியில் 1,05,000 அடி உயரத்துக்குமேல் அனுப்பப்படுவார்;- ஒரு பலூன் அவரைக் கொண்டுபோகும். அவ்வளவு உயரத்தில் அவர் 24 மணி நேரம் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் நடத்துவார். அவ்வளவு உயரத்தில் இதுவரை அவ்வளவு நேரம் ஒருவரும் இருந்ததில்லை!

மலர் 5| சென்னை: ஆனி 11௨ செவ்வாய் (25—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 12௨ புதன் (26—6—57) [இதழ் 9

டெல்லிப் பெரியவர்களின் சிக்கன நாடகம்!

ரசமான காட்சிகள் தயாராகின்றன!

அதிகாரிகளின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது

நிர்வாகத்தில் திறமை மருந்துக்கும் இல்லை

வரிப்பணம் வாரி இறைக்கப்படும் தகவல்கள்

புதுடில்லி, ஜுன் 25—

டெல்லிப் பெரியவர்கள், தாங்கள் விதித்துள்ள புதிய வரிகளின் கொடுமைகளை மக்கள் கண்ணிலிருந்து மறைப்பதற்காக, சிக்கனம் பற்றி பிரமாதமான நாடகமாடி வருவதை நாம் காணுகிறோம்.

சிக்கனமாக நிர்வாகம் நடத்தப் போவதாக இவர்கள் நாள் தவறுமல் பேசிவருகிறபோது, இவர்கள் இதுகாறும் எத்தனை ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினர்கள்—எவ்வளவு வரிப்பணம் வீணடிக்கப்பட்டது என்ற தகவல்களும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் துவங்கியுள்ளன.

'சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுகிறோம் என்று டெல்லி மந்திரிகள் கூறியது, சர்க்கார் கஜானவில் பெரும் தொகையை மிச்சப்படுத்தி விடாது; நடைபெறும் ஊழல்கள், வீணுக விரயமாகும் மக்களின் வரிப்பணம் இவை தடுக்கப்பட வேண்டும்' என்று நாம் அப்போதே எழுதியிருந்தோம்.

இப்போது டெல்லியில் உள்ள சில பத்திரிகை நிருபர்கள் சேகரித்துள்ள தகவல்கள், நிர்வாகத்தில் எவ்வளவு பணம் பாழாகிறது என்பதை எண்ணிப் பார்க்க உதவுகின்றன.

கடந்த பத்தாண்டுக் காலத்தில் டில்லி சர்க்காரிலிருந்த அதிகாரிகள், துணை அதிகாரிகளின் எண்ணிக்கை மட்டும் இரு மடங்கு உயர்ந்திருக்கிறதாம்!

சிவில் நிர்வாகச் செலவுமட்டும் 'பட்ஜெட்'டில் 40 சதவிகிதத்தை விழுங்கிவிடுகிறதாம்!

'சுதந்திரம்' பெறு முன்பு 7 செயலாளர்களும், சுமார் 100 அதிகாரிகளுமேதான் நிர்வாகத்தை நடத்தினராம்; ஆனால் இப்போது 37 செயலாளர்கள்

110 கூட்டுச் செயலாளர்கள், 250 உதவிச் செயலாளர்கள், மற்றும் பட்டாளம் பட்டாளமாக அதிகாரிகள் இருக்கின்றனராம்!

இந்த அளவுக்கு இன்று அதிகாரிகளின் எண்ணிக்கை நாளும் அதிகரித்துக் கொண்டே செல்வதற்கு எந்தவித நியாயமான முகாந்திரமும் இருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

சிக்கனம்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே இந்திய சிவில் நிர்வாகத்திற்கென்று சொல்லி, 20,000 பேர்களை பரீட்சை எழுத வைத்து, 250 பேர்களைத் தேர்ந்தெடுக்கும் வேடிக்கையும் டெல்லி சர்க்காரில் நடைபெறுகிறதாம்!

அத்துடன், சில ஆண்டுகளுக்கு முன்னும் இதுபோல 'சிக்கன' நாடகம் ஆடப்பட்டதாம். கஸ்தூரிபாய் லால்பாய் என்பவர் தலைமையில் ஒருகுழுவை நியமித்து, நிர்வாகச் சிக்கனம்பற்றி யோசனை கேட்டது டில்லி! அதன் சிபாரிசுகளை அமுல் நடத்த ஒரு சிக்கனப் பிரிவும் உருவாக்கப்பட்டதாம்! ஆனால், சிக்கனமான நிர்வாகம் பற்றிய குழுவின் யோசனைகளை அமுல் செய்ய முடியாமல் சிக்கனம் கருதி, அந்த சிக்கனக் குழுவையே கலைத்துவிட்டதாம், சர்க்கார்! இந்த வேடிக்கையான நாடகத்திற்குப் பிறகு இப்போது மீண்டும் நாடகமாடுகிறார்களாம், அந்தப் பெரியவர்கள்!

சமீபத்தில் தற்காப்பு இலாகாவிற்கான ஆயுதம் வாங்குவதில் ரூ. 50 இலட்சம் பாழாகாமல் தடுக்கப்பட்டதாம்!

முதலில் அந்த ஆயுதம் வாங்குவதில் ரூ. 50 இலட்சம் பாழடிப்பது என்றே முடிவாகியிருந்ததை புதிய தற்காப்பு மந்திரி வந்ததும் தடுத்தாராம்!

இரயில்வே போர்டு நிறுவப்பட்டபோது கோபாலசாமி அய்யங்கார், நான்கு உறுப்பினர்களை நியமித்தாராம்; ஆனால், பின்னர் அது 5 உறுப்பினர் கொண்டதாக விரிவாயிற்றும்! அதன் பிறகு சமீபத்தில், 10 பேர் கொண்டதாக இரயில்வே போர்டு பெருத்துவிட்டதாம்!

இதில் சிக்கனம் அமுல் செய்தாலே ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் மிச்சப்படுமாம்!

இப்போது போர்டு உறுப்பினர்களே, தங்களுக்குப் போதுமான அளவு வேலை இல்லை என்பதால், தங்களை சோம்பேறித்தனம் பிடித்துவிட்டதாகக் கூறுகிறார்களாம்!

மேலும் கோபால்சாமி அய்யங்கார், இரயில்வேக்களை ஆறு மண்டலங்களாகப் பிரித்தார்; ஆனால் அது, பின், மேற்கு வங்க மாநில சர்க்காருக்காக ஏழாக உருவாயிற்று; பின் இப்போது, அசாம் மாநில சர்க்காருக்காக எட்டாக உருமாறுகிறது! இதனால், ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கிறார்களாம்! சேர்மே, மாநிலத்திற்கொரு இரயில்வே 'மண்டலம்' என்ற நிலை வந்துவிடுமோ என்று அஞ்சப்படுகிறதாம்! இப்படியும் பணம் பாழாகிறது!

இந்த இலட்சணத்தில், இரயில்வேயில் போலீஸ், பாதுகாப்புப் படை, குற்ற இலாகா போலீஸ் என்று வேறு மூன்று பிரிவுகள் இருந்தும் இரயில்வேயில் திருட்டுக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறதாம்!

1954—55ல் 4,43,000 ஆக இருந்த திருட்டுச் சம்பவங்கள் 1955 - 56ல் 5,08,000 ஆக உயர்ந்து விட்டனவாம்! மூன்று படைகள் இருந்தும் விளைவு இதுதானும்!

இப்படி 'ஆற்ற மாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட்டு அரிவாள்' என்பதுபோல, டெல்லி சர்க்காரில் திறமைக் குறைவும், பணவிரயமும் இருக்கிறதாம்!

இந்த நிலையில், 'சிக்கன நாடகம் வேறு ஒரு கேடா?' என்று தான் மக்கள் கேட்பர்!

நிதி அமைச்சர் முன் ஆர்ப்பாட்டம்

ஊதிய நிர்ணயக் குழு அமைக்குமாறு கோரிக்கை

பம்பாய், ஜுன் 24—

பம்பாயிலுள்ள வருமான வரி காரியாலயத்திற்கு மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே. வந்த போது, இந்த அலுவலகத்தில் பணியாற்றும் 1,500 ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

'வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது! விலைவாசிகள் அதிகரித்து விட்டன! வாங்கும் ஊதியம் போதவில்லை! இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழுவை நியமிக்க வேண்டும்!' என்று அவர்கள் நிதி அமைச்சர் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

உணவுப் பண்டங்கள்

விலை உயர்வுக்கு காரணம் என்ன?

ஆராய குழு நியமனம்

புதுடில்லி, ஜுன் 24—

உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டே போவதை ஆராய்ந்து, மக்களுக்கு ஏற்றவாறு விலைகளை நிர்ணயித்து சிபாரிசுகளை அறிவிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் வேலைகள் 3 திங்களில் முடிக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையாகவா?

டோக்கியோ, ஜுன் 24—

சென்ற ஏப்ரலில் ரஷ்யாவில் வெடிக்கப்பட்ட அணுகுண்டிலிருந்து வெளிவந்த கதிரியக்கத்தை ஆராய்ந்த சப்பானிய விஞ்ஞானிகள் 'தோரியம்' என்ற கதிரியக்கத்தைக்கொண்டு ரஷ்யா அணுகுண்டை தயாரித்திருக்கக் கூடும் என்று கருதுகின்றனர்.

டாக்டர் அம்பேத்கார் மரணம்

மீண்டும் விசாரணை நடத்த டில்லி சர்க்கார் உத்தரவு

பூனு, ஜுன் 22—

டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து மீண்டும் புலன் விசாரணை செய்ய டில்லி சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மராட்டிய பிரதேச தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவரான கெயிக்வாட் எம். பி. அவர்கள் பண்டித நேருவுக்கு, 'அம்பேத்காரின் மரணம் குறித்து சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருப்பதால், அது குறித்து மீண்டும் விசாரணை நடத்தவேண்டும்,' என்று எழுதியிருந்தார்.

அவர் வேண்டுகோளின்படி, விசாரணை நடத்துமாறு டில்லி போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனராலுக்கு டில்லி சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

1956 - 57-ல் இந்திய அரசின் வருமானம்

ரூ. 495 கோடியாம்!

புதுடில்லி, ஜுன் 24—

இந்திய அரசாங்கத்திற்கு 1955—56-ம் ஆண்டில் வரிகள் மூலம் மொத்தம் ரூ. 428 கோடி வருமானம் கிடைத்துள்ளதாம்.

1956—57-ம் ஆண்டில் வரிகள் மூலம் ரூ. 495 கோடி வருமானம் கிடைத்தது என்றும், 1957—58-ல் வரிகள் மூலம் ரூ. 515 கோடி கிடைக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளில்

பூமியின் எந்தஇடத்திற்கும் 2மணி நேரத்தில் செல்ல இயலுமாம்!

1960-க்குப் பிறகு 'ராக்கெட்' உற்பத்தித் தொழிலில் 100 கோடி டாலர் செலவழிக்கப்படுமாம்.

பூமியில் எந்த இடத்திற்கும் இரண்டு மணி நேரத்தில் மனிதன் செல்லக்கூடியநிலை இன்னும் 25 ஆண்டுகளில் ஏற்படக்கூடும் என்று பொது மின்சார பொறியியல் நிபுணர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மாணவர்கள் சம்பளம் பற்றிய தகராறு

உடுப்பி மருத்துவக் கல்லூரி மூடப்படுகிறது

உடுப்பி, ஜுன் 25—

உடுப்பியில் உள்ள கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரி, மாணவர்கள் சம்பளம் கட்டுவது பற்றி தகராறு செய்வதால் மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கல்லூரியின் இறுதி வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் சிலர், விதிக்கப்பட்டுள்ள சம்பளக் கட்டணம் அதிகம் என்று கூறி சம்பளம் கட்ட மறுத்துவிட்டதுடன், பரீட்சையும் எழுதாமல் நின்றுவிட்டார்களாம்.

இது குறித்து, கர்நாடகப் பல்கலைக் கழகத்திற்கும், சென்னை சர்க்காருக்கும், சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கும் அறிவித்துவிட்டு, கல்லூரியை மூடிவிட்டிருப்பதாகக் கல்லூரியின் பதிவாளர் தெரிவித்திருக்கிறார்.

மாணவர்கள் கர்நாடகப் பல்கலைக் கழகத்திற்கு இது குறித்துப் புகார் செய்திருப்பதாகவும், பல்கலைக் கழகம் இந்த சம்பள விவகாரம் குறித்து விசாரணை செய்வதற்காக ஒரு குழுவை நியமிக்கிறது என்றும் கூறப்படுகிறது.

புத்த மதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்டோர்

சலுகைகள் பெறமுடியாதென அறிவிப்பு

பூனு, ஜுன் 23—

தாழ்த்தப்பட்டவர்கள் புத்த மதத்தைத் தழுவியதும் தாழ்த்தப்பட்டவர்களாகவோ, அல்லது வேறெந்த சாதிக்காரர்களாகவோ கருதப்படுவதில்லை. மதம் மாறியதும் அவர்கள், சாதிகளை மறந்துவிட்டவர்களாகவே கருதப்படுகிறது. எனவே, அவர்களுக்கு சர்க்கார் வழங்கிவரும்

விசேட்ச் சலுகைகள் கல்வி, உத்தியோகம் போன்ற துறைகளில் கிடைக்காது"

என்று, டெல்லியின் உள்நாட்டு இலாகா செயலாளர், மராட்டியப் பிரதேச தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர், பி. கே. கெயிக்வாட் எம்.பி.-க்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நம் நாடு

சென்னை 25—6—57 செவ்வாய்

எச்சரிக்கை பலன் பெறுமா?

'ஜனநாயகம்' என்ற அனுபவத்தால் திருத்திக் கொள்ளக் கூடிய சிற்சில குறைபாடுகளைக் கொண்ட—ஆனல் பாதுகாப்பு மிக்க—புனிதமான அரசியல் தத்துவம், இன்றைய உலகில், 'முதலாளித்துவ ஜனநாயகம்', 'மக்கள் ஜனநாயகம்' என்ற அடைமொழிகளுடன், விநோதமான விளக்கங்கள் தரப்பட்டு பல நாடுகளில் அமுல்செய்யப் பட்டு வருகிறது.

'ஜனநாயக சர்வாதிகாரம்' என்றுகூறி சிலர், தங்களது சர்வாதிகார ஆட்சிமுறைக்குத் திரையாக, இந்த கவர்ச்சிமிக்க 'ஜனநாயகம்' என்ற சொல்லை அடைமொழியாகப் பயன்படுத்தி வருவதையும் நாம் காண்கிறோம். 'ஜனநாயக'த்தின் புனிதத் தன்மை, அவர்களால் கற்பழிக்கப்படுவதைப்பற்றி நாம் இங்கு கவலை தெரிவிக்கவில்லை; அல்லது அந்தச் சொல் அடக்கிக் கொண்டிருக்கும் தெளிவான பொருளுக்கு அவர்கள் தரும் விசித்திர வியாக்கியானம் பற்றியும் நாம் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனல் சாதுர்யமான சொற்புரட்டுகளால், ஒரு அரசு முறையின் உண்மைத் தன்மையை, நெடுநாளைக்கு மூடி மறைத்துக்கொள்ள முடியாது என்பதுமட்டும் என்னவோ திண்ணம்.

நமது கவலை எல்லாம் இந்தியத் துணைக்கண்டத்தில் அமுல் செய்வதாகச் சொல்லப்படும் ஜனநாயகத்தைப் பற்றியது தான்.

'ஜனநாயகம்' என்ற அரசியல் தத்துவத்தின் சாரமே 'ஆக்கவும்—அழிக்கவும் இறுதியான அதிகாரம் படைத்தவர்கள் மக்களே' என்பதுதான்.

இன்று ஜனநாயக அரசு முறை அமுல் செய்யப்படுவதற்கு, தேர்தல் மூலம் மக்களிடம் — அவர்களை ஆள்வதற்கான—அவர்களுக்காகக் காரியங்களை நடத்திச் செல்வதற்கான அதிகாரம் கோரப்படுகிறது; பின் பாராளுமன்றம், சட்டசபைகள், சர்க்கார்கள் அமைக்கின்றன. இந்த செயல்படும் முறையைப்'பாராளுமன்ற ஜனநாயகம்' என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.

இந்தியாவில் இன்று நடைமுறையிலிருப்பது பாராளுமன்ற ஜனநாயகம்தான் என்றும் கூறுகிறார்கள்.

வெளித்தோற்றத்திற்கு இந்தியாவில் இன்று அமுலாகி வரும் அரசு முறை ஜனநாயக அரசு முறையாகக் காட்சி தரினும், உண்மையில் ஜனநாயகத்தின் உயர்ந்த நோக்கங்கள் அடிப்படையாக — உள்ளடக்கமாகக் கொள்ளப்படவில்லை என்பதை நேர்மையான அரசியல் வாதிகள் அனைவரும் ஒப்பவே செய்வர்.

ஜனநாயகத்தின் சில வெளிப்படையான அமைப்புகள்—உருவங்கள் மட்டும்தான் தெரிகின்றன. உள்ளடக்கம், விரிவான—உண்மையான ஜனநாயகமாக இருக்கவில்லை என்பது தெளிவு.

இந்தியாவின் இந்த 'ஜனநாயகம்' இனித்தான் கொஞ்சம் கொஞ்சமாக 'உயிர்' பெற வேண்டும்; இனிமேல்தான், இங்கு உண்மையான ஜனநாயகம் மலர்ந்தாக வேண்டும்.

உண்மையான ஜனநாயக மலர்ச்சிக்கு உதவக்கூடியவர்கள் மக்கள்தான். அவர்கள்தான், இப்போது நிலவிக் கொண்டிருக்கும் அரசுமுறைக்கு சிந்தித்து சிந்தித்து சுயஅனுபவங்கள் மூலம் கிடைத்துள்ள பெயரளவு ஜனநாயகத்தை, உண்மையான ஜனநாயக அரசுமுறையாக மாற்றியமைக்க வேண்டும்.

ஆனல் இந்தியத் துணைக் கண்டத்தின் மக்களில், இந்தப் பெரும் பொறுப்புணரக் கூடியவர்கள் மிகக் குறைவானவர்கள் தான். கல்வி அறிவு பெற்றோர் தொகை தெரிந்ததுதானே! மேலும் படித்த எல்லோரும் கூட இந்தப் பொறுப்பை உணர்ந்தவர்களாக இல்லை.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள பெருமுதலாளிகள், தங்கள் சுயவிருப்பத்திற்கொப்ப, இந்தப் பெயரளவு 'ஜனநாயக'த்தையும் கொன்றுவிடக் கருதுகிறார்கள். தங்களிடமுள்ள பணத்தால், முளைவிடும் பருவத்திலிருக்கும் இந்த அரசுமுறையின் வேரில் வெந்நீர் ஊற்ற முயற்சிக்கிறார்கள்.

தாங்கள் விரும்புகிற—தங்களின் சுயநலம் பேணக்கூடிய ஒரு கட்சியை நிரந்தரமாக ஆட்சியிலிருத்தி வைப்பதற்காக, காங்கிரசுக்கு நிதி உதவி செய்ய நினைக்கும் இந்த முதலாளிகளின் போக்கு, ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்துக் கொல்வதாகும் என்று பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதிகள், வழக்கொன்றின்போது கருத்தறிவித்திருக்கிறார்கள். அவர்களது அபாயச் சங்கொலியை, கடந்த சனியன்று நாம் விரிவாக வெளியிட்டிருந்தோம்.

மக்கள் தாங்களே சிந்தித்து தங்களுக்குகந்த ஒரு கட்சியை ஆட்சியிலமர்த்துவதற்குரிய வாய்ப்பு, தேர்தல். அந்தத் தேர்தலில், மக்களின் சிந்தனையே பிரதானமாயிருக்க வேண்டும் என்பது மிக மிக அத்தியாவசியமானது. ஆனல் அந்தச் சிந்தனைக்கே இடமின்றி, பணத்தால் அவர்களை விலைக்கு வாங்கி ஒரு கட்சி ஆட்சியிலமர்ந்தால், அது ஜனநாயக அரசுமுறையின் தூய நோக்கத்தையே சிதைப்பதாகும். அப்படி மக்களை—அவர்களது வாக்குரிமையை விலைக்கு வாங்குவதற்கு பணம் தருகிறேன் என்கிறார், டாடா! அதனைப் பெற்றுக்கொள்வதற்கு முந்துகிறது—சட்டம் இயற்றுகிறது — சர்க்கார் அமைத்திருக்கும் காங்கிரஸ்.

இதில் உள்ள அபாயத்தைத் தான் பம்பாய் நீதிபதிகள் மிகுந்த கடமையுணர்ச்சியோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மக்களின், அறியாமை, ஏழ்மை இவற்றை மனதில் கொண்டு, அவர்களது கணநேரத் தேவைக்குப் பணம் தருவதாகக் கூறி, அவர்களது இயல்பான சபலத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை விலைக்கு வாங்குவது, கேவலமானது—ஜனநாயகத்தின் தூய நோக்கத்திற்கே விரோதமானது என்பதோடு, நாளடைவில் 'பணம் தந்தால்தான் வாக்குச் சாவடிக்கு வருவேன்' என்ற நிலைக்கு மக்களைத் துரத்தும் அபாயகரமானதும்கூட என்பதை இன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்கள் பொறுப்போடும், கவலையோடும் சிந்தித்தாக வேண்டும்.

ஜனநாயகத்தில், வெள்ளித் தோட்டாக்களின் விளையாட்டு விளைவிக்கக்கூடிய பயங்கரமான ஆபத்துக்களைக் குறித்து பம்பாய் உயர் நீதிமன்றம் தக்க சமயத்தில் எச்சரிக்கை தந்திருப்பது குறித்து நாம் மகிழ்கிறோம். உண்மையான ஜனநாயக மலர்ச்சிக்காக விசுவாசத்தோடு மிகுந்த தன்னடக்கத்துடன் இடையறாது பணிபுரிந்து வரும் நமக்கு, உயர்ந்த இடத்திலிருந்து நற்சான்று தந்துள்ள அந்த நீதிபதிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். அவர்களது கடமை உணர்ச்சியையும், நெஞ்சுரத்தையும் பாராட்டுகிறோம்.

ஆனல் அவர்களது எச்சரிக்கை, எப்படியாவது பதவிக்கு வந்தால் போதும் என்ற கீழ்த்தரமான ஆசைக்கு அடிமைப்பட்டுவிட்ட காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு கொஞ்சமேனும் பொறுப்புணர்ச்சி ஊட்டினல் நல்லது. பொறுப்புணர்ச்சி பெறுவாரா இந்த 'இரட்டை மாடுகள்' சின்னத்தார்? எச்சரிக்கை பலன் பெறுமா?

பண்டாவின் பசப்பு வார்த்தைகள் பலிக்கவில்லை!

'தமிழர்களுக்கு சிங்களவருடன் சம அந்தஸ்து வேண்டும்'

இந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளுக்குத் தயார்

இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானம்

தமிழ் மொழி நியாயமான அளவு உபயோகிக்கப்பட அனுமதிக்கப்படும் என்ற பண்டாவின் நான்கு அம்சத் திட்டத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நிராகரித்திருப்பதுடன், சிங்களவருடன் தமிழருக்கு எல்லாத் துறைகளிலும் சம அந்தஸ்து வேண்டும்—சமத்துவம் வேண்டும் என்ற தனது கோரிக்கையையும் வற்புறுத்தி யிருக்கிறது.

இந்த அடிப்படையில், மொழிப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண, எவருடன் வேண்டுமானலும் பேச்சுவார்த்தை நடத்த தமிழரசுக் கட்சி தயார் என்றும் செயற்குழு தெரிவித்திருக்கிறது.

கட்சியின் செயற்குழு, தோழர் வன்னியசிங்கம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் கூடி, நிலைகளைப் பரிசீலித்து விட்டு, இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

நேற்று கொழும்புவில் வெளியிடப்பட்ட செயற்குழுவின் தீர்மானம் கூறுவதாவது:—

"நிலவுகிற அரசியல் சூழ்நிலையையும், தமிழ் மக்கள் கொண்டுள்ள அச்ச உணர்வுகளையும், சிங்கள—தமிழ் பிரச்சினைக்குத் திருப்திகரமான — நிரந்தரமான பரிகாரம் தேடவேண்டியதின் அவசியத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தமிழரசுக் கட்சியின் செயற்குழு, பிரதமர் பண்டாரநாயகாவின் 'தமிழுக்கு நியாயமான உபயோகம்' என்ற நான்கு அம்சத் திட்டத்தைப் பரிசீலித்தது; பண்டாவின் திட்டம், தமிழ் மக்களின் அபிலாஷையையும் கோரிக்கையையும் பூர்த்தி செய்ய முழுவதும் தவறிவிட்டது என்று கருதுகிறது; தமிழ் மக்கள் 'சிங்களவருடன் முழுச் சமத்துவம் என்ற அந்தஸ்து அங்கீகரிக்கப்பட வேண்டும்' எனக் கோருகின்றனர்.

"பொதுவான பிரச்சினைகளுக்கும், குறிப்பாக இலங்கையின் இனப் பிரச்சினைக்கும் சமாதான வழியில் தீர்வு காணுவதற்கு பேச்சு வார்த்தைகளும் விவாதங்களும் பலனுள்ள கருவிகளாகும் என்பதில்செயற்குழு தனக்குள்ள நம்பிக்கையை மீண்டும் எடுத்துரைக்கிறது. எனவே,இந்த விஷயத்தில், பிரதமர் என்ற முறையில் பண்டாரநாயகா முன்கையெடுத்து வைக்க வேண்டும் என்று நினைவூட்டுகிறது.

"பிரச்சினைக்குத் தீர்வுகாணவும், பேச்சு வார்த்தை நடத்தவும் எங்கள் கட்சி எப்போதும் ஒப்புக்கொள்ளும்; ஆனல் அதே நேரத்தில், பேச்சுவார்த்தைகள்நேர்மையாக இருக்கவும் பலனுள்ளதாக அமையவும் வேண்டுமானல்—அவை நிபந்தனைகளுடன் அளவிட்டவையாக இருக்க முடியாது என்ற உண்மையையும் கவனப்படுத்துகிறது.

"எதிர்காலத்தில் அவசியப்பட்டால் கட்சியின் சார்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த செயற்குழு, தோழர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோருக்கு அனுமதி அளிக்கிறது."

சேதி, தெரியுமா?

மனித சமுதாயம் உட்கொண்டு வெளியனுப்பும் மூச்சுக் காற்றின் காரணமாக வான மண்டலம் பாதிக்கப்படுவதாகவும் இதனல் உலகம் வெப்பமாகிக் கொண்டே இருப்பதாகவும், விஞ்ஞானிகள் கருகின்றனராம்!

இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா என்பது குறித்து ஆராய விஞ்ஞானிகள் அடுத்த ஆண்டில் தென் துருவத்திற்கு செல்லுவர்; அவர்கள் காற்றின் 'மாதிரி'யைச் சோதனை செய்வர்.

இடவசதித் திட்டம்

மாநிலங்களுக்குக் கோரிக்கை

பம்பாய், ஜுன் 22—

மாநிலங்கள் மேற்கொண்டுள்ள இடவசதித் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கப் பாங்கி தரும் கடன் வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாநில அரசாங்கங்களுக்கு இந்தியப் பேரரசின் நிதிஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வரிப்பணம் கண்டிராக்டர் இரும்புப் பெட்டிக்கா?

சர்க்கார், கால்வாய் புதுப்பித்த இலட்ணம்

ஐதராபாத், ஜுன் 21—

கடப்பா—கர்னூல் கால்வாய் ஒன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டதில் ஏராளமான பணம் பாழடிக்கப்பட்டது பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது.

இந்தக் கால்வாயின் இருமருங்கிலும் தண்ணீர் ஒழுகிவிடுவதாகக் கண்ட சர்க்கார், 73 மைல் நீளத்திற்கு கால்வாயின் இருமருங்கிலும் சிமெண்டுப் பாளங்கள் அமைப்பதின் மூலம் நீர் ஒழுக்கைத் தடுக்க நினைத்தனர்.

வேலை ஒரு கண்டிராக்டரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவரோ, பெரும் இலாபமடிக்கவேண்டும் என்ற பேராசையால், பாளங்கள் தயாரிப்பதில் கலவையில் சிமெண்டு அளவைக் குறைத்து, மணலை அதிகரித்து பாளங்களைத் தயாரித்து விட்டாராம்!

அப்படித் தயாரித்த பாளங்களை, கால்வாய்க் கரைகளில் பதித்தனர்; விளைவு, எதற்காக இந்த புனரமைப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறவில்லை; மீண்டும் தண்ணீர் ஒழுகுகிறதாம், இப்போது!

கண்டிராக்ட் தொகையில் 25 சதவிகிதத்திற்கும் அதிகமாக அவர் இலாபம் சம்பாதித்து விட்டாராம்!

உணவு நெருக்கடி ஏற்பட்டதின் விளைவு?

உரமிட இப்போது கடனுதவி

தஞ்சை, ஜுன் 22—

தஞ்சை மாவட்டம் நெல் சாகுபடியாளருக்கு தீவிர உரமிட ரூ. 20 இலட்சமும், கரும்பு சாகுபடிக்கு ரூ. 1,30,000-மும் சென்னை அரசாங்கம் கடனுதவ முடிவு செய்துள்ளது.

மத்திய—மாநில சர்க்கார்கள்

கடன் எழுப்ப திட்டம்

சிறுசேமிப்பில் தீவிர கவனம் செலுத்தப்படும்?

பம்பாய், ஜுன் 23—

"சென்ற ஆண்டைப்போலவே இவ்வாண்டிலும் மத்திய அரசாங்கம் ரூ. 100 கோடி கடன் எழுப்புவதற்குத் திட்டமிட்டிருக்கிறது" என்று நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்துள்ளார்.

சிறு சேமிப்புகள் மூலம் தங்களுக்குத் தேவையான தொகையைத் தேடிக்கொள்ளும்படி மாநில அரசாங்கங்களை அவர் கேட்டுக் கொண்டாராம்.

பொதுக் கடன் எழுப்புவதற்கு மாநில அரசாங்கங்கள் விரும்பினல் அதற்குத் தடையேதுமில்லையென்றும், ஆனல் சிறு சேமிப்புகள்மூலம் கடன் எழுப்புவது தான் எதிர்காலத்தில் வெற்றிகரமாக இருக்குமென்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளாராம்.

சொந்த முறையிலும் மாநில சர்க்கார்கள் கடன் எழுப்ப போவதாகவும், அதன் மதிப்பு ரூ. 60 கோடியாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘தன்மானமற்ற ஆட்சி மறைந்து நல்லாட்சி அமைய முயற்சிப்போம்’

‘தலையாட்டிவிட்டுத் திரும்பும் அமைச்சர்கள் பதவியில் நீடிப்பதில் இனி பயனில்லை’

செங்குன்றம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் இலட்சிய முழக்கம்

20—6—57 அன்று மாலை சென்னையை அடுத்த செங்குன்றத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

“இன்றைய ஆட்சியாளர்கள் புதிய வரிகளைப் போட்டு இந்த நாட்டில் இவ்வளவு அக்கிரமம் செய்வதற்குக் காரணம், பொது மக்கள் அரசியலில் அக்கறை கொள்ளாததேயாகும். இதை உணர்ந்து, எதிர்காலத்திலாவது நமது நாட்டில் ஓர் நல்லாட்சி அமைக்க பொதுமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பேராதரவு தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

“மற்ற மாநிலங்களிலுள்ள முதலமைச்சர்கள் தன்மானத்தோடு பணியாற்றுகின்றனர். அண்மையில் அசாம் மாநில முதலமைச்சரும், அவரது குழுவினரும் டில்லியிலுள்ள சர்க்காரை மிரட்டி—தலையிலே குட்டி தங்களது உரிமையைக் கேட்டிருக்கிறார்கள். அது என்ன உரிமை என்று கருதுகிறீர்கள்? ‘எங்கள் மாநிலத்திலே ஓர் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும்’ என்ற தங்களது உரிமையைக் கேட்டிருக்கிறார்கள் — வலியுறுத்தியிருக்கிறார்கள்.

“முதலில், அசாமிலேயே தொழிற்சாலை அமைப்பதாகச் சொல்லிய டில்லி சர்க்கார், இப்பொழுது ‘வேறு மாநிலத்தில் அமைக்கப்போகிறோம்’ என்று கூறியவுடன், அசாம் மந்திரி சபை, ‘இராஜினாமா செய்துவிடுவோம், எங்கள் மாநிலத்தில் தொழிற்சாலை அமைக்காவிட்டால்’ என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ‘நாங்கள் இராஜினாமா செய்துவிட்டால் வேறு யாரும்—எந்தக் காங்கிரஸ்காரரும் மந்திரிசபை அமைக்க மாட்டார்கள்’ என்றும் சொல்லியிருக்கிறார்கள். இத்தனைக்கும் நேரு கூட ஊரில் இல்லை. ஆனால் வெளிநாட்டிலுள்ள நேருவுக்கு தகவல் அனுப்பப்பட்டு, நேரு அங்கிருந்து ‘நாங்கள் அப்படியொன்றும் வேறு மாநிலத்திலேயே தொழிற்சாலை அமைப்பது என்று முடிவு செய்துவிடவில்லை’ என்று பதில் சொல்லியிருக்கிறார்.

“அசாமிலேயுள்ள ஆட்சியாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல; ஆனாலும், அவர்களுக்குத் தன்மானம் இருக்கிறது; ரோஷம் இருக்கிறது; அரசியல் விவேகம் இருக்கிறது. உரிமைக்குப் போராடும் அவர்கள் மந்திரிகளா? எதற்கெடுத்தாலும் தலையாட்டிவிட்டுத் திரும்பும் இவர்கள் மந்திரிகளா? என்பதை, மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

“‘சேலத்தில் ஓர் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும்; அதற்கான கனிவளம் ஏராளம் அங்கிருக்கிறது’ என்று எவ்வளவு எடுத்துக் காட்டினோம் நாம். ரஷ்யத் தலைவர்கள் இங்கு வந்தபோதுகூட பார்த்துவிட்டு சொன்னார்கள் — ‘சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதாயிருந்தால் நாங்கள் பண உதவி செய்கிறோம்’—என்று! ஆனால் இவ்வளவு சொல்லியும், எடுத்துக்காட்டியும், டில்லி ஏகாதிபத்தியம் நான்காவதாக ஏற்படுத்திய இரும்புத் தொழிற்சாலையையும் வடநாட்டில்தான் அமைத்தார்கள். இதைச் சுட்டிக்காட்டினால் திராவிட முன்னேற்றக் கழகத்தை திட்டுவதற்கு — வசை பாடுவதற்குத்தான் இந்த நாட்டு அமைச்சர்களுக்குத் தெரிகிறதே தவிர, அசாம் மாநில அமைச்சர்களுக்கு உள்ள தன்மானம் இவர்களுக்கு இருக்கிறதா? நாட்டுப் பற்று இருக்கிறதா? மொழிப் பற்று இருக்கிறதா?

“தமிழ் நாட்டிற்கு ‘தமிழ் நாடு’ என்று பெயர் வைக்க வேண்டும் என்ற சாதாரண பிரச்சினையிலாகிலும் உரிமை இருக்கிறதா? எந்த அளவுக்கு இவர்களுக்கு தமிழன் - திராவிடன் - தென்னாட்டவன் என்ற உணர்ச்சியோ அல்லது பொது மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்ச்சியோ எங்கே யிருக்கிறது, இவர்களுக்கு?

“ஆச்சாரியார் கோணல் புத்திக்காரரானாலும் - நமக்கும் அவருக்கும் கொள்கை வேறுபாடு இருந்தாலும், சென்னை நகர் யாருக்குச் சேரவேண்டும் என்ற பிரச்சினை வரும்போது, ஆந்திரர்களின் பெருத்த எதிர்ப்பைக் குறித்தும் கவலைப்படாமல், ‘சென்னை தமிழர்களுக்கு வேண்டும்’ என்று கடைசிவரையில் பிடிவாதமாக இருந்து சாதித்தார். அந்த ஒரு நல்ல பண்பாவது அவரது ஆட்சி காலத்தில் இருந்ததைக் கண்டோம்; அந்த ஒரு நல்ல நெறியாவது அவரிடம் இருந்தது. ஆனால் இந்தப் ‘பச்சைத் தமிழர்’ட்த்தில், யாரை பலியிட்டாகிலும் நாம் பதவியிலிருக்கவேண்டும் என்ற பண்பு தான் இருக்கிறது.

“ஆகவே, டெல்லி ஆட்சியாளர்கள் சொன்னக்காரர்கள் என்றால் இவர்கள், அவர்களுக்குக் காட்டிக் கொடுப்பவர்களாகத் தான் இருக்கிறார்கள்; ‘எடுபிடி’ களாகத்தான் இருக்கிறார்களே தவிர, பதவியிலிருக்கத் தகுதி யற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

“எனவே, இந்தத் தன்மானமற்ற ஆட்சியைப் போக்கி ஓர் நல்லாட்சி அமைக்க, இந்த நாடு எவருக்கும் அடிமைப்படாத சுதந்திர நாடாக - மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட ஒரு சுதந்திரக் குடியரசாகத் திகழ நாம் பாடுபட முனையவேண்டும்.

*

நிகழ்ச்சிகள்

20—6—57 அன்று சென்னையை அடுத்த செங்குன்றம் தி. மு. கழகச் சார்பில், ‘ரெட்ஹில்ஸ்’ பிள்ளையார் கோவில் தெருவில் ஓர் மாபெரும் கூட்டம் தோழர் ஜி. சாரங்கபாணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செங்குன்றம் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வந்திருந்தார்கள்.

இக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் இராதாமணாளன் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் தனது முன்னுரையில் தி. மு. க. தேர்தலில் ஈடுபட்டதன் நோக்கத்தையும்-அதன் வெற்றியையும், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், காங்கிரசார் சென்ற தேர்தலுக்கு முன் கள்ளமார்க்கெட்டில் சம்பாதித்த பணத்தைத்தான் தேர்தலின்போது வாக்குகளை விலை கொடுத்து வாங்கினார்கள் என்றும், இவ்வாறெல்லாம் பெறுவது வெற்றியல்லவென்றும், நேர்மையற்ற முறையில் ஆளும் கட்சியினர் நடந்துகொண்டதன் விளைவாக தி. மு. கழகம் தோல்வி அடைந்ததென்றும், அது தி. மு. கழகத்தின் தோல்வி யாகாதென்றும் கூறினார்.

அடுத்துப் பேசிய தோழர் இராதாமணாளன் திராவிடத்தை டெல்லிப் பேரரசினர் வஞ்சித்து வருவதையும், திராவிடம் பிரியவேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், புதிய வரிகளைக் கண்டித்தும், புதிய வரிகளை ஆதரித்துப் பேசுவோர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதையும் எடுத்துக்காட்டி, தமிழ் நாட்டிற்கு ‘தமிழ் நாடு’ என பெயரிடப்படாததைக் கண்டித்தும், அசாம் மாநில காங்கிரசாரின் தன்மான உணர்ச்சியையும், காமராசர் காங்கிரசின் தன்மானமற்ற போக்கையும் தெளிவாக விளக்கிக் காட்டினார்.

இறுதியாகப் பேசிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திராவிடம் பிரிந்தால் ஏற்படும் நன்மையையும், தற்போது நமக்கு இழைக்கப்படும் அநீதியையும், ‘உலகம் ஒன்று—ஓராட்சியின்கீழ்,’ என்ற நிலை வரும்போது நாமும் திராவிடப் பிரிவினையை தேவையில்லை எனலாம் என்றும், ஆனால் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளும் தங்கள் இன—மொழி—பண்பாடு ஆகியவற்றின் வேறுபாடுகளைக் காட்டி தனித்து வாழும்போது நாமும் வாழ்வதுதான் நமக்குப் பாதுகாப்பாகும் எனவும் சுட்டிக் காட்டினார்.

தலைவரின் முடிவுரைக்குப் பின் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுச்செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் செங்குன்றம் செல்லும் வழியில் பல கிராம மக்களும் கழகத் தோழர்களும் வழி நெடுகிலும் அணிவகுத்து நின்று வரவேற்பு அளித்தனர்.

கூட்டத்தில் பல கிளைக் கழகங்கள், தொழிலாளர் நிறுவனங்கள், தனிப்பட்டோர் ஆகியவர்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் தலைவர்களுக்கு அணிவிக்கப்பட்டதோடு செங்குன்றம் தி. மு. கழகத்தின் சார்பில் சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்காக ரூ. 100 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

(ந-நி.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 7/57

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், **7-7-57** ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
‘அறிவகம்’
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அணுசக்தி கதிரியக்கம்

விளைச்சலை அதிகரிக்க உதவும்

லண்டன், ஜூன் 23—

அணுசக்தி கதிரியக்கத்தின் மூலம் விளைச்சலை அதிகரிக்கவும், விவசாயத்தை அபிவிருத்திக்குக் கொண்டு வரவும் இயலுமாம்!

ஜப்பானில் உள்ள அமெரிக்க துருப்புகள்

எண்ணிக்கையை குறைப்பது பற்றி ஐக்-கிஷி கூட்டறிக்கை

வாஷிங்டன், ஜூன் 22—

“ஜப்பானில் உள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை அடுத்த ஆண்டிற்குள் கணிசமான அளவு குறைக்கப்படும்,” என்று, ஜப்பான் பிரதமர் கிஷியுடன் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

படைக்குறைப்பில் ஜப்பானில் உள்ள அமெரிக்க தரைப்படை முழுவதும் வாபஸ் பெறப்படும் என்பது பிரதான அம்சமாகும்.

ஜப்பானில், அமெரிக்க துருப்புகள் நிறுத்தப்பட்டிருப்பதற்கான ஒப்பந்தம் பற்றி அவ்வப்போது எழக்கூடிய பிரச்சினைகளைக் கவனிக்க இரு நாட்டு சர்க்கார் பிரதிநிதிகளும்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் கூட்டு அறிக்கை கூறுகிறது.

‘அணு ஆயுத சோதனை வெடிப்புகளுக்கு ஜப்பான் காட்டி வரும் எதிர்ப்புகள் பற்றி லண்டனில் நடைபெறும் ஆயுதப் பரிகாரணப் பேச்சுவார்த்தைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகின்றன’ என்றும் ஐசனோவர், ஜப்பான் பிரதமருக்குக் கூறியிருக்கிறார்.

காஷ்மீர் பற்றி நேரு

ஒஸ்லோ, ஜூன் 22—

“காஷ்மீர் பிரச்சினையில் எவ்விதமத்தியஸ்த தீர்ப்பையும் ஏற்பதற்கு இந்தியா இணங்காது; காரணம், இதுவரையில் எந்த ஒரு நாடும் தன்னுடைய சொந்தப் பிரதேசம் சம்பந்தமாக மத்தியஸ்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை” என்றும் பண்டித நேரு, இங்கு பத்திரிகை நிருபர்களிடையில் கூறியுள்ளார்.

வர்த்தகக் கொள்கையை அமெரிக்கா தளர்த்துகிறது

வாஷிங்டன், ஜூன் 22—

ஏற்றுமதி அனுமதியின்றி மின்சார சாமான்கள், டப்பியில் அடைக்கப்பட்ட காய்கறிகள் புகையிலைத் தயாரிப்புகள், சினிமா பிலிம், புகைப்படக் கருவிகள், பல் வைத்திய இரண சிகிச்சை மருந்துகள் போன்ற 200 இராணுவ முக்கியத்துவம் இல்லாத பண்டங்களை ரஷ்யாவுக்கும் மற்ற ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகளுக்கும் அனுப்புவதற்கு அமெரிக்கா அனுமதித்திருக்கிறது.

தண்டனைபெற்றனர்!

சென்னை, ஜூன் 21—

1957 ஏப்ரலில், இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் 15 நாட்களுக்கு வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டார்; மற்றொரு போலீஸ் கான்ஸ்டபிளின் சம்பளம் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைக்கப்பட்டது; காட்டு இலாகா கார்டு ஒருவர் வேலையினின்றும் நீக்கப்பட்டார்” என்று, அரசாங்க செய்தித் துறையினர் தகவல் தந்துள்ளனர்.

கண் சிகிச்சையாளர் பற்றாக்குறை நீங்கும்?

சென்னை, ஜூன் 22—

தமிழ் நாட்டில் கண் மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்குவதற்காக எழும்பூர் கண் மருத்துவமனைக்கு எதிரில் ரூ. $1\frac{1}{2}$ இலட்சம் செலவில் ஒரு கண் மருத்துவப் பயிற்சிப் பள்ளியைத் திறவ சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்.

ஜூன் 1-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு மூன்று புள்ளி குறைந்து 368-க்கு வந்தது. மீன், தேங்காய் ஆகியவைகளின் விலை இறங்கியதே இதற்குக் காரணம்.

பத்ராசலம் படகு விபத்து

விசாரணைக் குழு முடிவுகள்

ஐதராபாத், ஜுன் 24—

ஏப்ரல் 10-ந் தேதியன்று கோதாவரி நதியில் ஏற்பட்ட படகு விபத்து சம்பந்தமாக விசாரணை நடத்த ஆந்திர அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு தன்னுடைய முடிவுகளை அறிவித்துள்ளது.

இந்த விபத்து ஏற்பட்டதற்கு எந்த அதிகாரிமீதும் பழி சுமத்துவதற்கு இல்லையாம்.

ஓட்டப்படும் படகுகளை தணிக்கை செய்ய போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை குழு சுட்டிக்காட்டியுள்ளது.

படகோட்டிகள் அதிகப்படி கட்டணம் கேட்டு நட்டாற்றில் நிறுத்தியிராவிட்டால் விபத்து நேராதிருந்திருக்கக்கூடும் என்றும் குழு கருதுவதாகத் தெரிவித்துள்ளது.

கோதாவரி நதியின்மீது ஒரு பாலம் கட்டலாம் என்று குழு யோசனைக் கூறியுள்ளது.

இந்த அறிக்கையைப் பற்றி ஆந்திர அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

காஷ்மீர் பிரச்சினை

பாகிஸ்தான் பிரதமர் கருத்து

லண்டன், ஜுன் 24—

காமன்வெல்த் பிரதமர் மாநாட்டில் 'காஷ்மீர்' பிரச்சினை பற்றி தான் பேசப்போவதில்லை என்றும், உலக நாடுகள் தெரிவித்துள்ள கருத்தை இந்தியா, மதித்து ஏற்கிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும் என்றும் இங்கு வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் கூறியுள்ளார்.

ஐ. நா.-வில் காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் தாக்கல் செய்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

காஷ்மீரில் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதால் விபரீதங்கள் ஏற்பட்டுவிடாது என்றும் உலகத்தின் கருத்தை இந்தியா மதித்து நடக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைகளை முறையிட்டும் பயன் ஏற்படவில்லையாம்

அதிருப்தியைத் தெரிவிக்க குறைவான ஆடை அணிவராம்

கராச்சி, ஜுன் 23—

பனியன், அரை நிஜார், மரக் கட்டை காலணிகள்!

இவைகளை மட்டும் அணிந்து கொண்டு பாகிஸ்தானில் 1,500-ஊழியர்கள் அலுவலகம் வந்து வேலைகளைச் செய்வார்களாம்!

தங்கள் குறைகளை முறையிட்டும் ஒரு பயனும் ஏற்படாத காரணத்தால், இவர்கள் சட்டை, கோட்டு, முழுநிஜார் போன்ற கௌரவ ஆடைகளை அணிய மாட்டார்களாம்!

'குறைப் பிரசவ'ங்களைக் குறைப்பதற்குத் திட்டம்

ரூ. 4,32,000 செலவில் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படும்

சென்னை, ஜுன் 22—

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குறைப் பிரசவங்களைக் குறைப்பதற்கான வழிவகைகள் காண சென்னை சர்க்கார் ரூ. 4,32,000 செலவில் எழும்பூரிலுள்ள பெண்கள்—மருத்துவ மனையில் ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த முன்வந்துள்ளனர். இதில் மருத்துவப்பட்டதாரிகளுக்கும், மருத்துவக் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கும், நர்சுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

இந்த ஆராய்ச்சி நிலையத்திற்காக ரூ. 1½ இலட்சம் செலவில் புதிய கட்டிடமொன்று நிறுவப்படும்.

அகில இந்தியத் தலைமையின் கட்டளை

பம்பாய் பி. சோ. எதிர்ப்பு

பம்பாய், ஜுன் 21—

அகில இந்திய பிரஜா சோஷலிஸ்டுக் கட்சிச் செயலாளரின் தாக்கிதையும் மீறி, சம்யுக்த மராட்டிய சமிதி டிக்கெட்டில் வெற்றி பெற்ற பம்பாய் பி. சோ. கட்சி சட்டசபை உறுப்பினர்கள், தொடர்ந்து 'சமிதி'யிலேயே இருப்பதென முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

அகில இந்திய பி. சோ. செயலாளர் திரிலோக் சிங் என்பார், மராட்டிய பி. சோ. கட்சிச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், பம்பாய் சட்டசபையில் உள்ள பி. சோ. உறுப்பினர்கள் தனிக் கோஷ்டியினராக உட்காரவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தாராம்!

சட்ட மறுப்பு இயக்கம்

ஆக. 1-ல் சென்னையில் நடைபெறுமாம்

சென்னை, ஜுன் 24—

அகிம்சையை அடிப்படையாகக் கொண்டு தற்போது உத்திரப் பிரதேச மாநிலத்தில் சோஷலிஸ்டுக் கட்சியினர் நடத்திவரும் சட்டமறுப்பு இயக்கத்தை 1957 ஆகஸ்டு 1-ந் தேதி முதல் சென்னை மாநிலத்திலும் துவக்குவதென சோஷலிஸ்டுக் கட்சி முடிவு செய்துள்ளது.

கேரள மாநில தி. மு. கழகத் திறப்புவிழா

பொதுச்செயலாளர் தலைமையில் நடைபெறும்

திருவனந்தபுரம், ஜுன் 22—

கேரள மாநிலத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் அனைத்தையும் இணைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'கேரளா ஸ்டேட் கமிட்டி' (Kerala State Committee) திறப்புவிழா 30—6—57 ஞாயிறன்று பாலக்காட்டில் நடைபெறும்.

விழாவிற்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்பார்.

விழாவில் தோழர்கள் கி. மனோகரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர். (ந. நி.)

கழகக் கூட்டம்

★

கரூர்—கரப்பாளையம் :
26—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர் : என். இரத்தினம்

பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
ஏ. அம்மையப்பன்
எம். கே. கரிகாலன்
மு. குழந்தைவேல்

மந்திரிகளின் பதவி ஆசை

வினோபாபாவே கண்டனம்

வயது வரம்பு வேண்டுமென்கிறார்

பூனா, ஜுன் 24—

ஒருமுறை பதவிக்கு வந்துவிட்டால், பின், அதில் இடைவிடாது ஒட்டிக்கொண்டிருக்க நினைக்கும் மந்திரிகளின் போக்கினை ஆச்சாரியா வினோபா பாவே கண்டித்திருக்கிறார்.

"மந்திரிகளுக்கும், உயர் நீதி மன்ற நீதிபதிகள், மற்ற அதிகாரிகள் போல இத்தனை வயது வரைதான் பதவியிலிருக்கலாம் என்ற வரம்பு இருக்க வேண்டும்"

என்றும், அவர் கருத்தறிவித்துவிட்டு மேலும் சொன்னார் :—

"பதவியில் நுழைந்துவிட்டால் சாகும்வரை அதிலேயே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமெனக் கருதுகிறார்கள். இது, பழைய கால மன்னர்களின் போக்காகும். மன்னர் பரம்பரையில் மன்னர், இறக்கும்போதுதான் சிம்மாசனத்தைவிட்டு வெளியேறுவான். அதுபோன்றே 80 வயதில் மத்தியப் பிரதேச மாநில முதன் மந்திரி அண்மையில் இறந்துபட்டார்—நான் அவரை மரியாதைக் குறைவாகப் பேசுவதாகக் கருதக்கூடாது; ஆனால், நாம் மிகப் பழமையான போக்குடையவர்களாயிருக்கிறோம் என்பது மட்டும் என்னவோ உண்மை. நாம் புதியன கண்டு பயப்படுகிறோம்; பள்ளத்தில் வீழ்ந்து விடுகிறோம்."

சென்னை சர்க்கார் கடன் எழுப்பாதாம்!

சிறு சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்துவார்களாம்

சென்னை, ஜுன் 25—

இந்த ஆண்டில் சென்னை சர்க்கார் கடன் எழுப்பமாட்டார்களாம்!

மாறாக, சிறு சேமிப்புத் திட்டத்தை தீவிரப்படுத்துவார்களாம்!

இந்த தகவலை பம்பாயில் மாநில நிதி மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

இந்த விஷயம் குறித்து, மாநில மந்திரி சபையினர், இன்னும் இரண்டு நாளில் கூடி ஒரு முடிவு எடுப்பர் என்று தெரியவருகிறது.

மாநில சர்க்கார்கள் கடன் எழுப்பாமல் சிறு சேமிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்துவார்களேயானால், இதில் கிடைக்கும் தொகையில் மூன்றில் இரு பங்கு மாநிலத்திற்குத் தரப்படும் என்றும், கடன் எழுப்பினால், மாநிலங்கள் திரட்டும் சிறு சேமிப்பில் மூன்றில் ஒரு பங்குதான் தரப்படும் என்றும் நிதி மந்திரிகள் மாநாட்டில் கூறப்பட்டதாம்.

இந்த இரண்டையும் சென்னை மாநில சர்க்கார் யோசிக்கும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

'நீர்வாயுக் குண்டுகளை உடைய நாடுகளில் ஜனநாயகம் செத்துவிட்டது'

தொழிற்கட்சித் தலைவர் பேவான் தரும் விளக்கம்

மாஞ்சேஸ்டர் (இங்கிலாந்து) ஜுன் 24—

"சமாதானம், மற்றும் யுத்தம் என்ற இந்த இரண்டு பிரச்சினைகளையும் பொறுத்து நீர்வாயுக் குண்டுகளை வைத்திருப்பதால் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் ஜனநாயகம் செத்து விட்டது"

என்று, பிரிட்டிஷ் தொழிற்கட்சித்தலைவர் அனூரின் பேவான் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியதாவது :—

"நீர் வாயுக் குண்டு ஒரு ஆச்சரியமான ஆயுதமாகும்; முதலில் யார் அதனை உபயோகிக்கிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெறுவார்கள்.

"யுத்தப் பிரகடனம் செய்யப்போவது பற்றி நாம் விவாதிக்க முடியாது. ரஷ்யாமீது நாம் யுத்தப் பிரகடனம் செய்யபோகிறோமா என்பது குறித்துவிவாதிக்கமுடியாது. ஏனெனில், அவர்கள் நாம் பேசக் கூடியதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். மேலும் 24 மணி நேரத்திற்குள் நீர்வாயுக் குண்டை அனுப்புவோம் என்று எச்சரிக்கை தந்து ஒருவரை பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைக்க முடியாது.

"எனவே, இந்த ஆயுதம், யுத்தம் அல்லது சமாதானம் பற்றிய பிரச்சினைகளில் முடிவு கூறுவதற்குரிய அதிகாரத்தை மக்களிடமிருந்து தட்டிப் பறித்து விடுகிறது.

"எனவே, இது ஒரு சர்வாதிகார ஆயுதம். வழக்கம்போல பேச்சு வார்த்தைகள் நடத்தி எச்சரிக்கை தந்து, யுத்தப் பிரகடனம் வெளியிட்டு, பின்னர் இந்த நீர்வாயுக் குண்டு யுத்தம் துவங்க முடியாது. ஏனெனில், வன்மை வாய்ந்த எதிரி உடனடியாக யுத்தத்தைத் துவக்கிவிடுவான்.

"எனவே, பிரிட்டனிலோ அல்லது வேறெங்குமோ ஜனநாயக அமைப்புகள் தொடர்ந்து நீடிப்பதற்குள்ள ஒரே வழி, ஆயுத பரிகாரணம் தான்; இதனால்தான் நீர்வாயுக் குண்டுகளை ஒழிக்க முடியும்."

ஆமதாபாத்தில் இந்திய அணுசக்தி தயாரிப்பு நிலையமாம்!

ஆமதாபாத், ஜுன் 23—

ஆமதாபாத் மின்சார நிறுவனம் 95 சத விகிதம் தனது மின்சாரத்தைத் தொழிற்சாலைகளுக்குத் தருகிறதாம். மாதம் 33,000 டன் நிலக்கரி பயன்படுத்தப்படுகிறதாம். வங்காளம், பீகார் ஆகிய பகுதிகளிலிருந்து இந்த நிலக்கரி வருகிறதாம்.

மேலும் அதிகப்படியான மின்சாரம் தேவைப்படுகிறதாம்.

இதை மட்டும் அடிப்படையாகக்கொண்டு இந்திய அரசாங்கம் அணுசக்தி தயாரிப்பு நிலையத்திற்குத் தகுந்த இடம் ஆமதாபாத் என்று முடிவு செய்ய முனைந்துள்ளது. இந்த அணுசக்தி தயாரிப்பில் மின்சாரமும், புளூடோனியமும் கிடைக்கிறதாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாம். இது நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு உதவியாக அமையுமாம்.

அமெரிக்காவின் சண்டித்தனம்!

ஐந்தாவது தடவையாக மீண்டும் அணுகுண்டை வெடித்ததாம்!

லாஸ்வெகாஸ், ஜுன் 24—

இரண்டாவது உலகப் போரில் இரோஷிமா, நாகசாகி பகுதிகளில் வீசப்பட்ட — அழிவுகளை விளைவித்த அணுகுண்டை இன்று அமெரிக்கா வெடித்து சோதனை செய்திருக்கிறது.

இந்த குண்டு வெடிக்கப்பட்டதை 'இரண்டாவது சூர்யோதயம்' என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

அணுகுண்டு சோதனைகளை அகிலம் எதிர்த்தும் பிடிவாதமாக அமெரிக்கா நடத்தியுள்ள ஐந்தாவது அணுகுண்டு சோதனை என்று இதனைக் கூறுகின்றனர்.

தொடர்ந்து நடத்துவார்களாம்!

வாஷிங்டன், ஜுன் 24—

'கதிரியக்கமே இல்லாத புதிய நீர்வளிக்குண்டை தயாரிக்க முடியும்' என்று அமெரிக்கத் தலைவரிடம் அணுசக்தி விஞ்ஞானிகள் தெரிவித்தனராம்.

கடந்த ஜுன் 5-ந் தேதி முதல் கதிரியக்கத்தை குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இதுவரையில் நடத்தப்பட்ட அமெரிக்க நீர்வளிக் குண்டு சோதனைகளின் விளைவாக யாருக்கும் தீங்கு இழைக்கப்படவில்லையாம். மேலும் அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்த அந்த விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனராம்.

நைஜீரியாவுக்கு சுதந்திரம்

லண்டன், ஜுன் 23—

பிரிட்டனின் மிகப் பெரிய காலனியாக உள்ள நைஜீரியாவுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் சுதந்திரம் அளிக்க பிரிட்டன் தயாராக இருப்பதாக அதிகார பூர்வமாகத் தெரிய வருகிறது.

நைஜீரியாவில் மொத்தம் 3,30,00,000 மக்கள் வாழ்கின்றனராம்.

சென்னை - மயிலையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

★

மயிலை 45-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 28—6—57 மாலை 6 மணிக்கு, சித்திரகுளம் அருகாமையில் தோழர் டி. தம்பிதுரை தலைமையில் நடைபெறும்; தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் கழகத்தைத் திறந்துவைப்பார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

என். எஸ். இளங்கோ

சுற்றுப்பயணம்

ஜுன்
30 : குடியேற்றம்
காலை—திருமணம்
மாலை—பொதுக்கூட்டம்

ஜுலை
1 : காவேரிப்பட்டினம்
2 : மெணசி (பொம்மிடி)
6 : தொ. சேடர்பாளையம்
7 : சேலம்-அம்மாபேட்டை
8 : சலகண்டபுரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ